# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 10.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 8097/B/2018</u>**

திரு. K.R. அருண்குமார் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
நீலகிரி மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.K.R. அருண்குமார் அவர்களும் மற்றும் பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) நீலகிரி மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 26.2.2018 தேதியிட்ட கீழ்க்கண்ட விபரங்களை கோரி நீலகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரருக்கு மனு செய்துள்ளார்:-

1. Resolution of the District Committee meeting held on 26.9.2017
2. Proceedings No.R.C.A4/SR/48/2017 dated 13.11.2017
3. Report No.Lr.Rc.B2/No.4132 /2017 dated 10.1.2018 of the Revenue Divisional Officer Gudalur.
4. Report NO.Lr.NO. 1/2017 dated 10.1.2018 of the Assistant Director, Horticulture Department Gudalur.
5. Resolution of the District Committee meeting held on 12.1.2018.

3. பொது தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல், சென்னை நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் கோப்பு (பொது நல வழக்கு) சம்பந்தபட்டதாக இருப்பதால் தகவல்

வழங்க இயலாது என்று தெரிவித்துள்ளார். திருப்தியடையாத மனுதாரர், 3.5.2018 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல் பெறப்படாததால் தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 31.10.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின்போது, மனுதாரர், திரு.K.R.அருண்குமார் மற்றும் பொது தகவல் அலுவலர், நீலகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளருடன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு உரிய தகவலை ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

5. பொது தகவல் அலுவலர், 9.11.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல் வழங்கி, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். பொது தகவல் அலுவலர், 28.3.2018, 27.7.2018 மற்றும் 9.11.2020 தேதிகளில் மனுதாரருக்கு அளித்த தகவல் சரியானது என்று ஆணையம் ஏற்று, இந்நேர்வில் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல் திருப்தியளிக்காதபட்சத்தில், பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்து, உரிய பரிகாரத்தை தேடிக் கொள்ள மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்தி, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 8097/B/2018**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
நீலகிரி மாவட்டம்.

மனுதாரர்

Mr. K.R. Arunkumar, S/o Mr.Ravindran Nair,
No.15/417, Wentworth Estate,
Cherangode Village, Cherambadi P.O.,
The Nilgiris 643 205.

Copy to: File
SSPA-16.11.2020